ஒரு மதம் / நம்பிக்கையைப் பின்பற்றுவதற்கான சுதந்திரத்துக்கான மதிப்பு, பொறுமை மற்றும் நம்பிக்கை போன்ற மனிதாபிமான குணங்கள்.

"அரிது அரிது மானிடர் ஆதல் அரிது
மானிடர் ஆயினும் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான் செயல் அரிது
தானமும் தவமும் தான் செய்வராயின்
வானவர் நாடு வழித்திறந்திடுமே....."

என்று உலகத் தமிழ் போற்றும் பெண் புலவர் ஔவைப் பிராட்டியார் பாடியுள்ளார். மானிடராய் பிறப்பதன் நோக்கத்தை தெளிவுப்படுத்தி இயம்பிச் சென்றுள்ளார் அவர். இப்படித்தான் வாழ வேண்டும் என்ற வரையறைக்குள் இருந்தவன் இன்று வரம்பு தாண்டி, வழி மாறி எங்கே செல்கிறான் எனப் புரியவில்லை. மனிதனை மனிதனாய் வாழ வைக்க "மதம்" என்ற கொள்கையை அவனே உருவாக்கி அதனை சீரழித்தும் கொண்டிருக்கிறான். இன்று வரை. "மதம்" என்பது கடவுளை அறிவதற்கான வழியல் மனித ஆன்மா கடந்து செல்லும் ஒரு வழியாகும்.

இன்னும் சொல்லப் போனால் மதங்கள் என்று எதுவும் இல்லை. அவை மனிதன் ஏற்படுத்திக் கொண்டவை. பிறந்த மனிதப் பிறவி ஒரு நாள் நிச்சயமாக உயர் நீத்தே ஆகவேண்டும். அதற்கு முன் தான் செல்ல வேண்டிய பாதை எதுவென சிந்தித்து தேடியறிந்து அதை தன் வாழ்வில் செயல்படுத்தி வெற்றிகரமாக மரணிக்கும் வழியே உண்மையான பயணம். அந்த வழி எது என்று தீர்மானிப்பது

Scanned with CamScanner

அவரவர் அறிவுக்கு ஏற்ற இலகுவான வழியாகவே அமைகிறது.

மதங்களின் நோக்கம் மனிதன் மனங்களை அன்பால் ஏற்ப்பதே தவிர அறிவால் தீர்ப்பதே அல்ல. மனிதனை மனிதனாய் மாற்ற மனிதனுக்காக தோன்றியது தான் மதம். அன்றி மதத்துக்-காக மனிதன் தோன்றவில்லை. அவன் உருவாக்கிய மதங்கள் ஒன்றுக்கொன்று வேறுபட்டு இருக்கலாம். ஆனால் அம்மதங்கள் போதிக்கும் நெறி என்னவோ ஒன்றுதான்.

மனிதர்களுக்கிடையே பாலமாய் அமைந்திருக்கும் மனிதாபிமான இணங்கள் எல்லாமே எல்லா மதங்களிலும் வெளிப்படுத்தும் பொதுவான ஹமையங்களேயாகும். தனி மனிதன் என்ற நீதியல் ஒவ்வொருவருக்கும் சுதந்திரங்கள் வழங்கப்-பட்டுள்ளன, வாழும் சுதந்திரம், பேச்சு சுதந்திரம், கல்வி கற்பதற்கான சுதந்திரம், மதங்களை பின்பற்றும் சுதந்திரம் போன்ற இன்னோரன்னவை வரையறுத்துக் காணப்படுகின்றன. ஒருவன் இந்த மதத்தைதான் பின்பற்ற வேண்டும் என்று கட்டாயப்படுத்துவதற்கு அவனைப் பெற்ற தாய் தந்தையருக்கே உரிமை இல்லை

நாகரிகம், விஞ்ஞானம் என்று பல்வேறு வகையில் வளர்ச்சியுற்ற காலத்திலும் கூட பல்வேறு பிரதேசங்களில் இன்றும் தன் மத வெறியினால் பெற்ற பிள்ளைகளையே பலியாக்கி விடுகின்றனர். தமது பிள்ளைகள் பருவம் அடைந்து வேற்று மதத்தினரை திருமணம் செய்து கொண்டால் சமூகத்திலிருந்தும் குடும்பத்திலிருந்தும் அவர்களை ஒதுக்கி தீண்டத்தகாதவர் போல் செய்துவிடுகின்றனர். இவற்றையா மதங்கள் போதிக்கின்றன? மனிதாபிமானம் இல்லாத மனிதன் தன் சொந்த மதத்தை நேசிக்க தகுதியற்றவன் ஆகிறான்.

Scanned with CamScanner

மதங்கள் எதற்காக பிறப்பெடுத்தன என்பதை மறந்து மனிதன் மனித நேயத்தை சிறையிலடைத்து வாழ்ந்துக் கொண்டிருக்கிறான். என்று கூறினால் அது பிழையாகாது. ஆம்.

மனிதாபிமானங்கள் நாகதேவதையாகி
நஞ்சைக் கக்கிவிட்டன...
கவரிமான்களும் கலாசாரங்களும்
இன்று நலிவடைந்துவிட்டன....
அதர்ம குணங்கள் அரியணை ஏறி
ஆட்சியை செய்துக் கொண்டிருக்கின்றன....
மனித நேயங்கள் மந்திரி சபையின்
சேவகனாய் கைகட்டி நிற்கின்றன.....
நீதி தேவதைகள் இன்று நிர்வாணப்படுத்தப்பட்டதால்
நிதிகளே இப்போது தீர்ப்பு சொல்கின்றன.....
நியாயம் என்று வரும் போது பொய்கள்
எல்லாம்
சேலைகட்டி தேரில் ஏறி சீக்கிரமாய்
வந்து சேர்கின்றன...
தலைதூக்கும் தர்மங்களோ பாடை கட்டி
அதிலேறி நாமத்தோடே வந்து சேர்கின்றன.....

இவ்வாறாக இன்று மனிதாபிமானங்கள் மக்களுள் மாண்டுக் கொண்டிருக்கின்றன. என்று கூறினால் நாம் ஏற்றுக் கொள்ள மறுக்கவே முடியாது. இவை எல்லாம் ஒரு புறம் இருக்க, மதம் மாறுவதற்கு ஒருவரை கட்டாயப்படுத்தி அவரது சுதந்திரத்தைப் பறித்து அவரது சிந்தனையை களைத்து சீரழித்துக் கொண்டிருக்கின்றனர் ஒரு பாலர். மதம் என்ற பேரில் கட்சியமைத்து தனியாட்சிப் புரிந்துக் கொண்டிருக்கின்றனர். இதுவல்ல மதம். இவர்களிடம் பொறுமை எங்கே? மன்னிப்பு எங்கே? நம்பிக்கை எங்கே?

சுதந்திரமாக வாழவேண்டிய உலகில் உரிமைகளை சுரண்டி அடிமைப் போக்கில் வாழ்ந்துக் கொண்டி-
-ருக்கின்றனர் ஒரு சிலர். மதத்தை சுதந்திரமாக பின்பற்றுவது தொடர்பாக அவர்கள் போதிய தெளிவில்லாமலேயே பிற்போக்குடையவர்களாக வாழ்ந்துக் கொண்டிருக்கின்றனர். இது தொடர்-
-பாக மேலும் நோக்கும் போது, பலவேறு தலைவர்கள் மதம் சார்பாக இவ்வாறு கூறுகின்-
-றனர்.

"மதம் ஒடுக்கப்பட்ட மக்களின் ஏக்கப் பெருமூச்சாகவும் இதயமற்ற உலகின் இதயமாகவும் ஆன்மா இல்லாத நிலைமைகளின் ஆன்மாவாகவும் உள்ளது." என கார்ல் மார்க்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

"மதம் பல கிளைகளைக் கொண்ட ஒரு மரமாகும். கிளைகள் என்ற முறையில் பல மதங்கள் இருப்பதாக நீங்கள் சொல்லக் கூடும். ஆனால் மரமாக இருக்கும் மதம் என்னவோ ஒன்றுதான்." என்று மகாத்மா காந்தி கூறிச் சென்றுள்ளார். மேலும் அவர் கூறுவது என்னவென்றால்,

"எனக்கு மட்டும் அதிகாரம் இருக்குமானால் வகுப்புவாதத்தையும், மதவெறியையும், வெறுப்புணர்வையும், பகைமையையும் வளர்க்கக் கூடிய எல்லா எழுத்துக்களையும் தீண்டத்தகாதவையாக நான் அறிவிப்பேன்" என்றும், "இந்துக்களை அழிப்பதன் மூலம் முஸ்லீம்கள் இஸ்லாத்துக்கு சேவை செய்ய இயலாது, மாறாக அவர்கள் இஸ்லாம் மார்க்கத்தை அழித்துவிடலாம், என்று இந்துக்கள் நம்புவார்களானால் அவர்கள் இந்து தர்மத்தை அழிப்பவர்களாவர்." என்றும் காந்தியடிகள் கூறியுள்ளார்.

Scanned with CamScanner

"மதமானது அநேகமாக எப்போதுமே இருட்டு நம்பிக்கை, மற்போக்கு, வறட்டு கோட்பாடு, வெறியுணர்ச்சி, மூடநம்பிக்கை, சுரண்டல், உடமையாளர்களின் நலன்களைப் பாதுகாத்தல் ஆகியவற்றை ஆதரிப்பதாகத் தோன்றுகின்றது." என்று ஜவகர்லால் நேரு கூறுகின்றார். இவரது கருத்து என்னவோ மதங்களுக்குப் பொருந்த வில்லை. மதவாதிகளுக்கே பொருந்துகிறது. என்றுக் கூறலாம்.

இவ்வாறாக மதம் என்ற பார்வையில் தலைவர்கள் கூறிச் சென்ற கருத்துக்களை நோக்கலாம். அண்ணல் காந்தியடிகள் கூறியது போல் கிளைகள் வேறுபட்ட போதிலும் மதம் என்னவோ ஒன்றுதான். மதங்கள் கூறும் மனிதாபிமான இணங்களும் ஒன்றுதான்.

பெரும்பாலும் எல்லா மதங்களும் முக்கியமான ஒரு நபரை மையமாக வைத்தே ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. அந்தந்த நபரே அந்தந்த மெய்யான மதத்தை தோற்றுவித்தவராக கருதப்படுகின்றார்.

உதாரணமாக எமது வரலாற்றுப் பதிவுகளை அடிப்படையாக வைத்துப் பார்க்கும் போது இளவரசராக இருந்த புத்தர் தன்னை சூழ்ந்திருந்த இந்துமத சமுதாயத்தில் துன்பமும் துயரமும் பரவியிருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். ஆகவே வாழ்க்கையின் வேதனை தரும் பிரச்சினைகளுக்கு ஒரு பரிகாரத்தை தேட அவர் முயன்றதன் விளைவாகவே புத்த மதம் தோன்றியது. ஆகவே இவ்வாறாக தோன்றிய மதங்கள் அனைத்துமே ஏதோ ஒரு வகையில் தன்னை சார்ந்த மக்களின் வாழ்க்கை நெறியை

சீரமைக்கும் நோக்கில் எழுந்ததுவே ஆகும். இறைவனாக போற்றப்படுகின்ற புத்தர், தன்னை சார்ந்தவர்களுக்கு அன்பு, கருணை, பொறுமை, நம்பிக்கை மற்றும் மன்னிப்பு போன்ற மனிதாபிமான குணங்களை போதித்தருளினார். அவரையும் அவரை தெய்வமாய் வணங்கும் மதத்தையும் நேசிப்பவர்கள் மேற்கூறிய குணங்களை தன்னகத்தே வைத்திரு-த்தல் வேண்டும். அப்போதுதான் அது உண்மையான நேசமாகும். எத்தனைப் பேர் இதற்கு தகுதியாக உள்ளனர்?

பொதுவாக மதங்கள் கூறும் மன்னிப்பு, பொறுமை, நம்பிக்கைப் போன்ற குணங்கள் மனித நல்வாழ்வுக்கு பாலமாய் விளங்குகின்றன. அதாவது மனிதனை நல்ல விடயங்களில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகளையும், சூழ்நிலைகளையும் ஏற்படுத்தியுள்ளன. நம்பிக்கை என்பது இந்த உலகத்தை சகோதரத்துவம் சமாதானம் என்னும் வழிகளில் இட்டுச்செல்கின்றது அத்தோடு மதம் என்பதிலிருந்து மனிதமானது மனித விழுமியங்களையும் கலாசார பண்பாட்டு அம்சங்களையும் மனித சமூகம் கற்றுக் கொள்கிறது

மேலும் மனித மாண்பு நிறைந்த பண்புகளாவன சுயநம்பிக்கை, தூய சீர்திருத்தம், சுயமாக உணர்ந்து நடந்துக் கொள்ளும் தன்மை, சுய ஒழுக்கம், சுயமான விருத்தி போன்ற பண்புகளையும் மதம் மனிதனுக்குக் கற்றுக் கொடுக்கின்றது. பொறுமை என்பது வாழ்நாளில் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் இருக்க வேண்டிய முக்கிய பண்பாகும். எனவேதான் இதனை மதங்கள் வலியுறுத்தி நிற்கின்றன. "பொறுத்தார் பூமி ஆள்வார்" என்பது பழமொழி, பொறுமை உடையவர்கள் பூமியை மட்டுமல்ல வானுலகத்தையும் ஆளக்கூடிய

வல்லமை உடையவர்களாகின்றனர். இது புதுமொழி மேலும் மன்னிப்பு என்பது மனிதத்துவத்தின் மகுடமாக விளங்குகிறது. ஆயிரம் மக்கள் சூழ, கொடியவர்களின் நிழலை இடையாக்கி சிலுவையை சுமந்துச் சென்ற இயேசு பிரான் பொறுமை காத்து நம்பிக்கையுடன் மரணத்தை எதிர்கொண்டார். தன்னை சிலுவையில் அறைந்தவர்களுக்கும் மன்னிப்பு வழங்கும் இறைவனாய் அவர் போற்றப்படுகிறார். அந்தளவிற்கு மன்னிப்பு தூய்மையானது. இக்குணங்களை எவர் கடைபிடித்து வாழ்கின்றாரோ அவரே உண்மையாக தன் மதத்தை நேசிக்கும் ஜீவனாய் இருப்பர். மதங்கள் மனிதனை மனிதனாய் வாழ வைக்கவே அவதாரம் எடுத்துள்ளன. அதனை நாம் ஒவ்வொருவரும் புரிந்துக் கொள்ள வேண்டும்.

வக்கிரமும் வஞ்சகமும் பலிதீர்க்கும்
வன்மமும் உக்கிரமாய் வளர்ந்திட்டால்
உலகில் நிலைக்காது எதுவொன்றும்...
அறம் போற்றும் மதம் உண்டேல்
இங்கு மாண்டிடாது எதுவொன்றும்...

இம்மேதினியில் போர் மூண்டால்
அண்டமெலாம் புகை சூழ்ந்தால்
காரிருள் நம் கண் மறைத்தால்
நன்னெறி தன் கரு கலைத்தால்
புதைந்திடும் புவி மண்ணுக்குள்ளே,
மீண்டும் முளைத்திடும் நன் மதத்தாலே...

"மனிதாபிமானத்துடன் வாழ்ந்து நம் மதத்தை
பார் போற்ற வைப்போம்..."

Scanned with CamScanner

ஆக்கம் :- இராஜேந்திரன் திவ்யபாரத்
வயது எல்லை 16 - 29
(22 வயது)

Email - divyabarathbarath@gmail.com

தே. அ. அ. இல - 990392358V

Scanned with CamScanner